வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

துரித கற்றல் கையேடு, விஞ்ஞானம்

தரம் 09 | தவணை - III | செயலட்டை 1

அலகு : 14 அலைகளின் தெறிப்பு, முறிவு

கற்றற்பேறு : 14.1தளவாடிகளில் ஒளித்தெறிப்பை அறிதல்

**விடய உள்ளடக்கம்**

- உலகிலுள்ள மிகப்பிரதானமான சக்திமுதல் சூரியன் ஆகும்.
- ஒளி ஆனது சக்தியின் பிரதான ஒரு வடிவமாகும்.
- ஒளிக்கதிர்கள் பல இணைந்து ஒளிக்கற்றை பெறப்படும்.

ஒளிக்கதிர்



ஒளிக்கற்றை

- ஒளி எப்போதும் நேர் கோட்டில் பயணிக்கும்
- ஒளி வெற்றிடத்தினூடாகவும் பயணிக்கும்
- ஒளியைக் கடத்தும் தன்மைக்கேற்ப திரவியங்கள் 3 வகைப்படும்.
  (I) ஒளி ஊடுகாட்டும் திரவியம் (II) ஒளி கசியும் திரவியம்
  (III) ஒளி ஊடுகாட்டாத திரவியம்
- வளியில் ஒளியின் வேகம் $3 \times 10^{8}$ $ms^{-1}$
- இடியும் மின்னலும் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும் முதலில் மின்னல் தென்படக் காரணம் ஒளி, ஒலியை விட வேகம் கூடியது என்பதாலாகும்.
- குறித்த ஊடகம் ஒன்றில் பயணம் செய்யும் ஒளிக்கதிரொன்று தேறிமேற்பரப்பொன்றில் பட்டு அதே ஊடகத்தில் திரும்பிப் பயணம் செய்தல் **ஒளித்தெறிப்பு** எனப்படும்.
- பொதுவாக ஆடிகள் தெறிமேற்பரப்பைக் கொண்டவை.
- ஆடிகளாக



என்பவற்றைக் குறிப்பிடலாம்

குழிவாடி குவிவாடி தளவாடி பரவளைவாடி

- இவற்றுள் அன்றாடம் நாம் முகம் பார்க்கப் பயன்படுத்துவது தளவாடியாகும்.

- **செயற்பாடு 1:- தளவாடியில் ஒளித்தெறிப்பை அறிதல்**

1) வெள்ளைக் கடதாசி ஒன்றின் மீது தளவாடியை நிலைக்குத்தாக வைத்து பென்சிலால் தெறிமேற்பரப்பு ஓரமாக கோடு ஒன்றை வரைக.
2) லேசர் கதிர் ஒன்றை கோணம் அமைத்து தளவாடியில் படச்செய்க. தளவாடியில் படும் புள்ளியை O எனக் குறிக்குக.
3) லேசர் கதிர் ஆரம்பிக்கும் புள்ளியை A எனக் குறிக்குக.
4) லேசர் கதிர் தெறித்து வரும் புள்ளியை B எனக் குறிப்பிடுக.
5) படுபுள்ளி O இல் வரையும் செங்குத்து OL எனப் பெயரிடுக.
6) லேசர் லைற், தளவாடி என்பவற்றை அகற்றி பள்ளிகளை இணைத்துக் கதிர்ப்படம் ஒன்றை வரைக.
7) AO வைப் பெயரிடுக. ………………………………
8) BO வைப் பெயரிடுக. ………………………………
9) $A\hat{O}L$ யைப் பெயரிடுக. ………………………………
10) $B\hat{O}L$ யைப் பெயரிடுக. ………………………………
11) $A\hat{O}L$, $B\hat{O}L$ கோணங்கள் இடையிலான தொடர்பு யாது.
    ……………………………………
12) இதிலிருந்து ஒளித்தெறிப்பு விதிகள் 2 இனையும் தருக.
    i) …………………………………. ii) ……………………………………

**செயற்பாடு 2:- ஒழுங்கான தெறிப்பு, பரவல் தெறிப்பு என்பவற்றை அறிதல்**

I. தளவாடி, அலுமினியத்தாள் என்பவற்றின் மீது லேசர் ஒளிக்கற்றையைச் செலுத்துக.
II. ஒளிக்கதிர் தெறிப்படையும் விதத்தை அவதானிக்குக.

(a) இரண்டு வகை ஒளித்தெறிப்புகளையும் பெயரிடுக.

I. ……………………………… II. ………………………………

(b) இரண்டு வகைத் தெறிப்புகளுக்குமான கதிர்ப்படம் வரைக.

(c) இரண்டு தெறிப்புகளும் ஒளித்தெறிப்பு விதிகளுக்கு அமைகின்றன. இக்கூற்றை ஏற்கிறீரா.

……………………………………………………………………………………

## மதிப்பீட்டு வினாக்கள்

1. ஒளித்தெறிப்பு என்றால் என்ன?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

2. ஒளித்தெறிப்பு விதிகளைத் தருக.

(i) ……………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………

3. தளவாடியில் ஒளித்தெறிப்புத் தொடர்பாக கீழ்வருவனவற்றைப் பெயரிடுக.

(i) PQ -

(ii) QS -

(iii) QR -

(iv) X$^{o}$ -

(v) RQS எத்தனை பாகை -




4. தரப்பட்ட கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(i) கரடுமுரடான மேற்பரப்பில் ஒழுங்கான தெறிப்பு நிகழும்

(ii) எல்லாச் சந்தர்ப்பங்களிலும் படுகோணம் தெறிகோணத்திற்குச் சமன் அன்று.

(iii) தளவாடிக்குச் செங்குத்தாகப்படும் கதிர் தெறிப்படையாது.

(iv) படுகோணமும் தெறிகோணமும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமனாகும்.

## வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

## துரித கற்றல் கையேடு, விஞ்ஞானம்

**தரம் 09 தவணை - III செயலட்டை 2**

**அலகு : 14 அலைகளின் தெறிப்பு, முறிவு**
**கற்றற்பேறு : 14.2 தளவாடியில் தோன்றும் விம்பங்களை அறிவர்**

**செயற்பாடு 3:- தளவாடியின் முன்னுள்ள புள்ளிப் பொருளின் விம்பத்தை அறிதல்**

- வெள்ளைத் தாள் ஒன்றின் மீது தளவாடி வைக்கப்பட்டு தெறி மேற்பரப்புள்ள பகுதியில் கோடு வரைக.
- புள்ளிப் பொருள் O வில் இருந்து 2 லேசர் ஒளிக்கற்றைகளைத் தளவாடியில் படுமாறு செலுத்துக. புள்ளிப் பொருள் வைக்கப்பட்ட இடத்தில் குண்டூசி ஒன்றைக் குறிப்பிடுக.
- புள்ளிப் பொருள் வைக்கப்பட்ட புள்ளி O, தளவாடியில் ஒளிக்கதிர்கள் படும் புள்ளிகள், தெறிப்படைந்த கதிர் செல்லும் கோட்டில் புள்ளிகள் என்பன இடப்பட்டு தளவாடி, ஒளிமுதல் என்பன அகற்றப்பட்டு புள்ளிகள் இணைக்கப்பட்டு கதிர்ப்படம் வரைக.

(i) தெறிகதிர்களை நீட்டி கற்பனைக் கோடு சந்திக்கும் புள்ளியை I யைப் படத்தில் குறிக்குக.

(ii) விம்பத்தூரம், பொருள் தூரத்தை அளந்து எழுதுக.

விம்பத்தூரம் ……………………………

பொருள் தூரம் ……………………………

(iii) விம்பம் மெய்யானதா, மாயமானதா

……………………………

(iv) விம்பம் நிமிர்ந்ததா, தலைகீழானதா

……………………………

(v) விம்பம் உருச்சிறுத்ததா, உருப்பெருத்ததா, பொருளளவானதா? ……………………

(vi) இதன் முன் நீர் வலக்கையை உயர்த்தும்போது விம்பம் எக்கையை உயர்த்துகிறது. ……………………………

(vii) மேலே நீர் கூறிய செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும். ……………………………

**செயற்பாடு 4:- தளவாடியில் பக்க நேர்மாறல் அடையும் தன்மையை அறிதல்**

(i) கீழே தரப்பட்ட 10 ஆங்கிலப் பெரிய எழுத்துக்களை தளவாடியின் முன் பிடித்து தோன்றும் விதத்தைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | ஆங்கிலப் பெரிய எழுத்து | தோன்றும் விதம் |
|---|---|---|
| 1. | A | |
| 2. | B | |
| 3. | C | |
| 4. | D | |
| 5. | E | |

| | ஆங்கிலப் பெரிய எழுத்து | தோன்றும் விதம் |
|---|---|---|
| 6. | H | |
| 7. | J | |
| 8. | M | |
| 9. | O | |
| 10. | P | |

(ii) இவ்வெழுத்துக்களில் மாற்றமின்றித் தென்படும் எழுத்துக்கள் எவை?

……………………………………………………………………………………..

(iii) மேலே உமது விடைக்கான காரணம் யாது?

……………………………………………………………………………………..

(iv) அம்புலன்ஸ் வண்டிகளில் AMBULANCE (mirrored) என இவ்வாறு எழுதப்படக் காரணம் யாது?

……………………………………………………………………………………..

**செயற்பாடு 5:- தளவாடியைப் பயன்படுத்தி இயங்கும் கருவிகளையும், செயற்பாடுகளையும் அறிதல்**

**A B C D E F**








G


H

படங்கள் தொடர்பாகத் தொடர்புபடுத்துக. உதாரணமாக ஒன்று செய்யப்பட்டுள்ளது.

| ஆங்கில எழுத்து | கருவி / இடம் | செயற்பாடு |
|---|---|---|
| A | ஒளிநுணுக்குக்காட்டி | மறைவாக இருந்து வெளியில் நடப்பவற்றை அவதானித்தல் |
| B | முடிதிருத்தகம் | ஒளியைப் பொருளிற்குச் செலுத்தல் |
| C | சூள்காட்டி | விம்பததைத் திரையில் விழுத்துதல் |
| D | கலையுருக்காட்டி | முடிதிருத்தும்போது தலையின் பின்பக்கத்தை அவதானிக்க |
| E | மேந்தலை எறியி | நகைப்பெட்டியில் நகைகள் அழகாகத் தெரிய |
| F | வீடுகளில் | பலவிம்பம் பெறப்படல் |
| G | குளிர்பானக்கடைகள் | ஒப்பனை அலங்காரம் |

## மதிப்பீட்டு வினாக்கள்

1. தளவாடியில் தோன்றும் விம்ப இயல்புகள் 5 தருக.
   (i) ………………………………… (ii) …………………………………
   (iii) ………………………………… (iv) …………………………………
   (v) …………………………………
2. தளவாடி ஒன்றில் தென்பட்ட இலக்கங்கள் அற்ற கடிகாரத்தின் விம்பத்தில் 9.00 மணி காட்டியது எனின் கடிகாரத்தின் உண்மையான நேரம் என்ன.
   …………………………………
3. பிற்பகல் 4 மணியைக் காட்டும் கடிகாரமொன்று தளவாடியில் பிடிக்கும்போது அதன் விம்பம் காட்டும் நேரம் எவ்வளவு.
   …………………………………
4. கடிகார நேரமும், அதன் விம்ப நேரமும் மாற்றமில்லாது இருக்கும் நேரங்கள் எவை.
   …………………………………
5.




(i) இது என்ன கருவியை ஒத்துள்ளது. ……………..…..
ii) நடுவில் பெரிய கல் இருப்பினும் மறுபக்கத்தில் உள்ளவர்க்கு பூ தெரியுமா. ………………………
iii) உமது விடைக்கான காரணம் யாது?
……………...
iv) பூவில் படும் ஒளிக்கதிர் செல்லும் பாதையை வரைந்து காட்டுக

6. சரியான கதிர்ப்படத்தின் கீழ் கோடிடுக

1. 
2. 
3. 
4. 

## வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

## துரித கற்றல் கையேடு, விஞ்ஞானம்

**தரம் 09 தவணை - III செயலட்டை 3**

**அலகு : 14 அலைகளின் தெறிப்பு, முறிவு**
**கற்றற்பேறு : 14.3 ஒளியின் முறிவுத் தோற்றப்பாட்டை அறிவர்**

- ஒரு ஊடகத்திலிருந்து இன்னுமொரு ஊடகத்திற்கு ஒளி பயணம் செய்யும்போது அதன் பயணப் பாதையின் திசையில் ஏற்படும் மாற்றம் **ஒளி முறிவு** எனப்படும்.




- கண்ணாடி அடர்ந்த ஊடகம், நீர் ஐதான ஊடகம்.
- ஊடகங்களின் அடர்த்தி வேறுபட பயணம் செய்யும் ஒளியின் வேகமும் மாறுபடும் இதனால் ஒளியின் பயணப் பாதையில் விலகல் ஏற்படும். வளியில் ஒளியின் வேகம் $3 \times 10^8\ ms^{-1}$, கண்ணாடியில் ஒளியின் வேகம் $2 \times 10^8\ ms^{-1}$.
- ஊடகங்களின் அடர்த்தி அதிகரிக்க ஒளியின் வேகம் குறையும். ஒளியானது அடர்ந்த ஊடகத்தில் இருந்து ஐதான ஊடகததினுள் செல்கையில் செவ்வனை விலத்தி முறியும்.
- ஒளியானது ஊடகத்திற்குச் செங்குத்தாகச் செல்லும்போது முறிவடையாது நேரே செல்லும்.

**செயற்பாடு 5:- கண்ணாடிக்குற்றியினூடு ஒளிமுறிவை அறிதல்**

(i) வெள்ளைக் கடதாசி ஒன்றின் மீது கண்ணாடிக் குற்றி ஒன்றை வைத்து அதன்புற உருவை வரைக.

(ii) அதன் ஒரு பக்கத்தினூடு லேசர் ஒளிக்கற்றையைச் செலுத்தி அதன் எதிர்ப்பக்கதினூடு அக்கதிரை வெளியேறச் செய்க.

(iii) படுகதிர் படும்புள்ளி, வெளிப்படுகதிர் வெளியேறும்புள்ளி, என்பவற்றிற்கான புள்ளிகளை வெள்ளைக் கடதாசியில் இடுக.

(iv) கண்ணாடிக் குற்றி, லேசர் லைற் என்பவற்றை அகற்றியபின் புள்ளிகளை இணைத்து படுகதிர், முறிகதிர், வெளிப்படுகதிர் என்பவற்றை வரைக.

(v) படத்தில் படுகோணம், முறிகோணம், வெளிப்படுகோணம் என்பவற்றை முறையே P, Q, R எனப் படத்தில் குறித்துக் காட்டுக.

(vi) கோணம் P உடன் ஒப்பிடுகையில் Q எவ்வாறு உள்ளது?

…………………………………………………………………………………………

(vii) கண்ணாடிக்குற்றியின் கீழ் கறுத்தபுள்ளி ஒன்றைஇட்டு மேலிருந்து அவதானிக்கும் அவதானம் யாது?

…………………………………………………………………………………………

**செயற்பாடு 6:- கண்ணாடி அரியத்தில் ஒளிமுறிவை அறிதல்**

(i) வெள்ளொளிக் கற்றை ஒன்றை அரியத்தினூடு செலுத்துக.

(ii) அரியத்தினூடு முறிவடைந்து பெறப்படும் நிறப்பட்டையை வெள்ளைக் கடதாசி ஒன்றில் விழுத்துக.

(iii) ஒளிமுறிவையும், நிறப்பட்டையிலுள்ள நிறங்களையும் குறித்துப் படத்தைப் பூரணப்படுத்துக.

(iv) பெறப்பட்ட நிறப்பட்டை எவ்வாறு அழைக்கப்படும்?

……………………………………



(v) அதன் நிறங்களை ஒழுங்காகத் தருக.

……………………… ………………………

……………………… ………………………

……………………… ………………………

………………………

(vi) ஏழு நிறங்களாகப் பிரியும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும். ………………………

(vii) இதனை முதன்முதலில் கண்டறிந்த விஞ்ஞானி யார்.

……………………………………

(viii) இதனை அவதானிக்க அவர் அமைத்த உபகரண அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்.

……………………………………

(ix) அன்றாட வாழ்வில் ஏழு நிறங்களின் பட்டை பெறப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

1) …………………………………… 2) ……………………………………

## மதிப்பீட்டு வினாக்கள்

1. ஒளி முறிவு என்றால் என்ன.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

2. அரியம் ஒன்றினால் வெள்ளொளி ஏழு நிறங்களாகப் பிரிக்கப்படுகின்றது. இதன் மூலம் பெறப்படும் முக்கிய முடிவு

(i) அரியத்தில் ஒளிமுறிவு நடைபெறுகிறது (ii) வெள்ளொளி உடலுக்குத் தீங்கு பயக்கும்

(iii) வெள்ளொளி ஏழு நிறங்களால் ஆனது (iv) அரியத்தில் வெள்ளொளி தெறிப்படையும்

3. பின்வரும் கூற்றுக்களில் ஒளி முறிவுடன் தொடர்பானது.

(a) தளவாடி ஒன்றில் முகம் பார்த்தல் (b) சூழ்காட்டியில் விம்பம் தோன்றல்

(c) நீர்க் குவளையிலுள்ள பென்சில் முறிந்திருத்தல்

(d) கலையுருக் காட்டியில் பல்விம்பம் தோன்றல்

4. பின்வரும் செயற்பாடுகளுக்கான அவதானத்தையும் அதற்கான காரணத்தையும் தருக.

| | செயற்பாடு | அவதானம் | அவதானத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. | பாத்திரத்தின் அடியில் இடப்பட்ட ஆணி  | | |
| 2. | நீருள்ள பாத்திரத்தில் இடப்பட்ட பென்சில்  | | |

## வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

## துரித கற்றல் கையேடு, விஞ்ஞானம்

**தரம் 09** **தவணை - III** **செயலட்டை 4**

**அலகு : 14 அலைகளின் தெறிப்பு, முறிவு**

**கற்றற்பேறு : 14.4 ஒலி அலை பற்றி அறிந்து கொள்வர்**

- ஒலி யாதாயினுமொரு தடையில் பட்டு அதே பக்கத்திற்குத் திரும்பிச் செல்லுதல் **ஒலித் தெறிப்பு** எனப்படும்.
- ஒளிக்கதிரைப் போன்று, ஒலிக்கதிரும் தெறிப்படைகின்றது.




உரு 14.21

- மணிக்கூட்டின் மிகச்சிறிய ஒலி காதில் கேட்டது.
- கண்ணாடித்தட்டை அகற்றியவுடன் மணிக்கூட்டு ஒலி காதில் கேட்கவில்லை.
- காரணம் ஒலித்தெறிப்பு நிகழவில்லை.
- ஒலித்தெித்தெறிப்பு 2 வகைப்படும்.

1)எதிரொலி
2)தெறிப்பொலி

- முதலில் கேட்ட ஒலி தடை ஒன்றில் பட்டு தெறிப்படைவதன் காரணமாக மீண்டும் கேட்குமாயின் அது எதிரொலி எனப்படும்.
- ஒலியானது 330 $ms^{-1}$ வேகமுடையது. அதாவது 1 செக்கனில் 330m தூரம் செல்லும்.
- 0.1 செக்கனில் 33m தூரம் பயணம் செய்யும்.
- மனித மூளையானது காதின் மூலம் கேட்ட ஒலியை 0.1 செக்கன்கள் வைத்திருக்கும் தன்மையுடையது.
- எனவே எதிரொலி கேட்பதற்கு எமக்கும் தடைக்கும் இடையான தூரம் அண்ணளவாக (33/2m) 16.5m ஆக இருக்க வேண்டும்.
- எமக்கும் ஒலித்தடைக்கும் இடையிலான தூரம் 16.5m இலும் குறைவாக இருக்கும்போது முதலில் கேட்ட ஒலி காதில் இருந்து மறைய முன்பு தெறிப்படைந்த ஒலி மீண்டும் கேட்பதனால் கேட்டலில் தெளிவற்ற தன்மை ஏற்படும். இதுவே **தெறிப்பொலி** எனப்படும்.
- மண்டபங்களில் தெறிப்பொலியால் பேச்சுக்களைத் தெழிவாகக் கேட்க முடியாத தன்மை ஏற்படும்.
- இதனைத் தடுக்க சுவர் அழுத்தமற்றதாக்கப்படும், ஒலியை உறிஞ்ச தடித்த திரைச்சீலைகள் இடப்படும், கூரைகளில் துவாரங்கள் இடப்படும்.
- தெறிப்பொலியைப் பயனுள்ளவாறு பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்

(i) உடலின் அகப்புற அங்கங்களைப் பாரவையிடும் கழியொலி அலகிடலியில் (Ultra sound scanner)

(ii) கடலின் ஆழத்தை அறிய பயன்படும் எதிரொலிமானி (Echo sounder)

(iii) வௌவால் போன்ற இரவில் நடமாடும் விலங்குகள் தடைகளை விலக்கிப் பயணம் செய்ய

### மதிப்பீட்டு வினாக்கள்

1. வளியில் ஒலியின் வேகம் யாது?

   ……………………………………………………………………………………..

2. இடியும் மின்னலும் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும் இடியோசை சிறிது நேரத்தின் பின்பே கேட்கிறது. காரணம் யாது?

   ……………………………………………………………………………………..

3. ஒலி தெறிப்படையும் என்பதைக் காட்ட அமைக்கப்பட்ட தொகுதியைப் படம் காட்டுகிறது.




உரு 14.21

(i) இங்கு அவதானம் யாது?

………………………………………………………

(ii) கண்ணாடித்தட்டை அகற்றியதும் அவதானம் யாது?

………………………………………………………

(iii) இப்பரிசோதனையின் முடிவு யாது?

………………………………………………………

4. ஒலித்தெறிப்பின் மூலம் பெறப்படும் 2 விளைவுகள் தருக.

……………………………………….…   ……………………………………………

5. முதலில் போட்ட ஒலி மீண்டும் தெளிவாகக் கேட்குமாயின் அது எவ்வாறு அழைக்கப்படும்.

……………………………………………………………………………………………

6. முதலில் போட்ட ஒலி மீண்டும் தெளிவற்றதாகக் கேட்குமாயின் அது எவ்வாறு அழைக்கப்படும்.

……………………………………………………………………………………………

7. எதிரொலி ஒன்று கேட்பதற்கு ஒலிமுதலுக்கும் தடைக்கும் இடையில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தூரம் எவ்வளவாக இருக்க வேண்டும்.

……………………………………………………………………………………………

8. எதிரொலியின் அனுகூலம், பிரதிகூலம் ஒவ்வொன்று தருக.

அனுகூலம் :- ……………………………………….…

பிரதிகூலம் :- ……………………………………….…

9. பின்வருவனவற்றிற்குப் பயன்படும் அலை எது?

(i) தாயின் வயிற்றிலுள்ள சிசுவை அறிய ……………………………………….…

(ii) மரியானா ஆழியின் ஆழத்தை அறிய ……………………………………….…

10. கிணறு ஒன்றின் மேல் நின்ற பையன் ஒருவன் எழுப்பிய ஒலி கிணற்றினுள் சென்று எதிரொலிக்க 10 செக்கன்கள் எடுத்தன. எனின் கிணற்றின் ஆழம் எவ்வளவு. (வளியில் ஒலியின் வேகம் $330ms^{-1}$)

கிணற்றினுள் ஒலி சென்று திரும்ப எடுத்த நேரம் = ……………………………………

கிணற்றினுள் ஒலி செல்ல எடுத்த நேரம் = ……………………………………

1 செக்கனில் ஒலி பயணித்த தூரம் = ……………………………………

∴ ……….. செக்கனில் ஒல பயணித்த தூரம் = ……………………………………

ஆகவே கிணற்றின் ஆழம் = ……………………………………

11. மண்டபம் ஒன்றில் நிகழ்த்தப்பட்ட உரையைத் தெளிவாகக் கேட்க முடியாதிருந்தது.

a) இதற்கான காரணம் யாது. ……………………………………………………………

b) இதனைத் தடுக்க செய்யக்கூடியவை 2 தருக. ……………………………………

……………………………………

12. பாடசாலை ஒன்றில் பல மாடிகளைக் கொண்ட கூட்டங்கள் அருகருகே காணப்பட்ட போது ஒரு மாடியின் மேல்தளத்திலுள்ள மாணவரின் சத்தம் அருகிலுள்ள மாடியில் கேட்பதை விட அதே மாடியின் கீழ்த்தளங்களுக்குக் கேட்பது அதிகமாகவிருந்தது. காரணம் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.

துரித கற்றல் கையேடு

தரம் 09 விஞ்ஞானம் தவணை III

அலகுப்பரீட்சை - 14 அலைத்தெறிப்பும் முறிவும் செயலட்டை 5

சரியான விடையின் கீழ் கோடிடுக

1. ஒளிக்கதிர் ஒன்றின் நடத்தை படத்தில் காட்டப்பட்டுள்ளது. இச்செயற்பாடு குறிப்பது முறையே





   1. ஒளிமுறிவு , ஒளித்தெறிப்பு
   2. ஒளித்தெறிப்பு, ஒளிமுறிவு
   3. ஒளிமுறிவு, ஒளிமுறிவு
   4. ஒளித்தெறிப்பு, ஒளித்தெறிப்பு

2. ஒளிக்கதிரின் தெறிப்பு ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. இங்கு a, b ஆகிய கோணங்கள் முறையே குறிப்பது.




   1. படுகோணம், தெறிகோணம்
   2. படுகோணம், முறிகோணம்
   3. தெறிகோணம், படுகோணம்
   4. முறிகோணம், படுகோணம்

3. இங்கு காட்டப்பட்டுள்ள ஒளித் தெறிப்புகளான P, Q குறிப்பது



P



Q

1. பரவல் தெறிப்பு, ஒழுங்கான தெறிப்பு    2. ஒழுங்கான தெறிப்பு, பரவல் தெறிப்பு
3. ஒழுங்கான தெறிப்பு, ஒழுங்கான தெறிப்பு    4. பரவல் தெறிப்பு, பரவல் தெறிப்பு

4. A - தளவாடியில் ஒழுங்கான தெறிப்பு நிகழும்
   B - புத்தகப்பக்கத்தில் பரவல் தெறிப்ப நிகழும்
   C - ஒழுங்கான தெறிப்பில் பொருள் ஒருதிசையில் மட்டுமே தென்படும்
   மேற்கூறிய கூற்றுக்களில் சரியானவை
   1. A, B    2. B, C    3. A, C    4. B, C

5. தளவாடி ஒன்றில் தோன்றும் விம்பங்கள் தொடர்பான கூற்றுக்கன் கீழே தரப்பட்டுள்ளன.
   A - நிமிர்ந்த சமபருமனான விம்பம்    B - மாய விம்பம்
   C - மெய்விம்பம்    D - பக்க நேர்மாறான விம்பம்
   இவற்றில் சரியானது
   1. A, B, C    2. A, B, D    3. A, C, D    4. B, C, D

6. தளவாடி ஒன்றின் முன் வைக்கப்பட்டுள்ள எழுத்தின் விம்பம் எவ்வாறு காணப்படும்.



7. தளவாடி ஒன்றின் முன் 2m தூரத்தில் பொருள் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. ஆடிக்கும் விம்பத்திற்கும் இடைப்பட்ட தூரம் யாது?
   1. 2m    2. 4m    3. 1m    4. 0.5m

**8.** தளவாடி ஒன்றின் முன் 5m தூரத்தில் பொருள் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. பொருளிற்கும் விம்பத்திற்கும் இடைப்பட்ட தூரம் ?

1. 5m 2. 10m 3. 15m 4. 2.5m

9. தளவாடி ஒன்றின் முன் 5m தூரத்தில் பொருள் ஒன்று ஆடியை நோக்கி 3m தூரம் நகர்ந்த பின் பொருள், விம்பத்திற்கிடைப்பட்ட தூரம் யாது?

1. 4m 2. 6m 3. 10m 4. 2m

10. இங்கு காட்டப்பட்டுள்ள உபகரணமும் அதில் ஆடிகள் பொருத்தப்பட்டுள்ள இடைக் கோணமும் முறையே குறிப்பிடும் விடை யாது?

1. கலையருக்காட்டி 60 2. சூள்காட்டி 60

3. கலையுருக்காட்டி 90 4. சூள்காட்டி 45

11. A - இங்கு சூள்காட்டி காட்டப்பட்டுள்ளது

B - இது நீர்மூழ்கிக் கப்பல்கள் சுரங்கம் என்பவற்றிலிருந்து வெளியே அவதானிக்க பயன்படும். இவற்றில் சரியானது

1. A மட்டும் 2. B மட்டும் 3 A, B 4. A,B பிழை

12. எதிரொலி ஒன்றைத் தெளிவாகக் கேட்பதற்கு ஒலிமுதலுக்கும் தடைக்குமிடைப்பட்ட மிகக்குறுகிய தூரம் யாது?

1. 10m 2. 15m 3. 16.5m 4. 20m

13. முதலில் ஒலி கேட்டபின் ஒலித்தெறிப்புக் காரணமாக மீண்டும் கேட்கும் ஒலி எவ்வாறு அழைக்கப்படும்?

1. எதிரொலி 2. தெறிப்பொலி 3. கழியொழி 4. அலையொலி

14. இரவில் நடமாடுவதற்காக கழியொலியைப் பயன்படுத்தும் பிராணி எது?

1. நாய் 2. பூனை 3. வெளவ்வால் 4. ஆந்தை

15. வெள்ளொளிக் கதிரானது அரியமொன்றினூடாக செலுத்தப்படும் போது ஏழு நிறங்களாக பிரிகையடைதல் எவ்வாறு அழைக்கப்படும்

1. நிறமாலை 2. நிறப்பிரிகை 3. நிறவட்டம் 4. நிறக்கலப்பு

(15x2=30 புள்ளிகள்)

## பகுதி 11

தளவாடி ஒன்றில் ஒளிக்கதிர் தெறிப்படைவது படத்தில் காட்டப்பட்டுள்ளது.

1. P, Q, R ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

   ……………………………………………………………………………

2. X, Y ஆகிய கோணங்களைப் பெயரிடுக

   ……………………………………………………………………

3. புள்ளி M எவ்வாறு அழைக்கப்படும். ……………………………………………

4. கோணம் X=40 எனில் கோணம் Y ன் பெறுமானம் யாது?

   ……………………………………………………………………………………

5. ஒளித்தெறிப்பு விதிகள் இரண்டையும் தருக.

   ……………………………………………………………………………………

   ……………………………………………………………………

6. பின்வரும் சந்தர்பங்களில் தெறிப்படையும் கதிர்களை வரைக



7. மாணவன் ஒருவன் கிணற்றில் வீழ்ந்த வாளி ஒன்றை
அவதானிப்பது படத்தில் காட்டப்பட்டுள்ளது




1. இங்கு ஒளிக்கதிரின் எத்தோற்றப்பாடு காட்டப்பட்டுள்ளது?

   …………………………………………………………………………………

2. இங்கு ஒளி பயணம் செய்யும் இரு ஊடகங்களும் எவை?

   …………………………………………………………………………………

3. இவ்விரு ஊடகங்களையும பிரிக்கும் மேற்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

   …………………………………………………………………………………

4. கோணம் X, Y ஐ பெயரிடுக.

   …………………………………………………………………………………

5. வாளி காணப்படும் உண்மையான ஆழம் எவ்வளவு?

   …………………………………………………………………………………

6. வாளி என்ன ஆழத்திலுள்ளது போல் தோன்றுகிறது?

   …………………………………………………………………………………

7. இத் தோற்றப்பாட்டால் ஏற்படும் மற்றொரு விளைவை எழுதுக.

   …………………………………………………………………

(7x2= 14 புள்ளிகள்)

03. கண்ணாடிக் குற்றியினூடாக ஒளிக்கதிர்
முறிவடையும் விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1. **X, Y** ஊடகங்களை பெயரிடுக.

…………………………………………………………………………

2. a, b, c ஆகிய கதிர்களைப் பெயரிடுக

…………………………………………………………………………………

3. இதில் ஒளியால் அடர்ந்த ஊடகம் எது?

…………………………………………………………………………………(3x2=6 புள்ளிகள்)

04. ஒலித்தெறிப்பை பரிசோதிப்பதற்காக மாணவன் ஒருவன் அமைத்த உபகரண அமைப்பு படத்தில் காட்டப்பபட்டுள்ளது.



உரு 14.21

1. பரிசோதனையின் அவதானம் யாது? அவதானத்திற்கு காரணம் யாது?
...........................................................................................................
...........................................................................................................
2. உலோகத்தட்டு அகற்றிய பின் அவதானம் யாது? காரணம் யாது?
...........................................................................................................
...........................................................................................................
3. இங்கு கண்ணாடி / அழுத்தமான உலோகத் தட்டு பயன்படுத்தப்படுவது ஏன்?
...........................................................................................................
...........................................................................................................
4. காட்போட் அட்டை வைக்கப்பட்டது ஏன்?
...........................................................................................................
...........................................................................................................
5. ஒளித்தெறிப்பின் விளைவுகள் 2 தருக.
...........................................................................................................
...........................................................................................................
6. விரிவுரை மண்டபங்களின் ஒலித்தெறிப்பால் ஏற்படும் அசௌகரியாங்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் உபாயங்கள் 3 தருக.
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
7. ஒலித்தெறிப்பை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
...........................................................................................................
...........................................................................................................

05. சரி பிழை இடுக.

1. ஒலியை விட ஒளி வேகம் கூடியது. ( )
2. தளவாடியில் ஒளி முறியும் ( )
3. லேசர் ஒளி கண்ணிற்கு தீங்கானது. ( )
4. தளவாடியில் தலைகீழ் விம்பம் தோன்றும் ( )
5. கதிர்படம் வரைய இருகதிர் போதுமானது ( )
6. ஒளிநுணுக்குக்காட்டியில் தளவாடி உண்டு. ( )
7. (20-20000)Hz ஒலியை மனித காது கேட்கும் ( )

06. இணைக்குக.

| | |
|---|---|
| 1. 20000Hz ற்று மேற்பட்ட ஒலி | 330 ms-1 |
| 2. கடலின் ஆழம் அறிதல் | எதிரொலிமானி |
| 3. ஒளியின் வேகம் | கழியொலி அலகு |
| 4. ஒலியின் வேகம் | கழியொலி |
| 5. உடலினுள் அவதானிக்க | $3x\ 10^{8}\ ms^{-1}$ |

## வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.
## துரித கற்றல் கையேடு, விஞ்ஞானம்

தரம் 09     தவணை - III     செயலட்டை 6

**அலகு** : 15 **எளிய பொறிகள்**

**கற்றற்பேறு** : 15.1 **எளிய பொறிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்வர்**

- வேலையை இலகுபடுத்தும் கருவிகள் பொறிகள் எனப்படும்.
- பொறிகள் 2 வகைப்படும். (i) எளிய பொறிகள்
  (ii) சிக்கலான பொறிகள்
- **எளிய பொறிகள்**



நெம்புகோல்



சில்லோடு அச்சாணி

எளிய பொறிகள்



சாய்தளம்

கப்பி



- **நெம்புகோல்**




உ-ம்: (i) அலவாங்கால் கல்புரட்டல்
(ii) குறடால் வெட்டல்
(iii) கத்தரிக்கோலால் வெட்டல்
(iv) கையை மடித்தல்

1ம் வகை நெம்பு

நெம்புகோல்

2ம் வகை நெம்பு

உ-ம்: (i) பாக்குவெட்டி
(ii) ஒற்றைச்சில்லு வண்டி
(iii) சோடா திறப்பானால் சோடா திறத்தல்




3ம் வகை நெம்பு

உ-ம்: (i) சாவணம்
(ii) கையை நீட்டல்
(iii) தும்புத்தடியால் கூட்டல்
(iv) தூண்டிலால் மீன்பிடித்தல்




$$\text{பொறிமுறை நயம்} = \frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$$

சமன்பாடுகள்

$$\text{திறன்} = \frac{\text{பொறிமுறைநயம்}}{\text{வேகவிகிதம்}} \times 100$$

$$= \frac{\text{பொறி செய்த வேலை}}{\text{பொறியால் செய்யப்பட்ட வேலை}} \times 100$$

$$\text{வேகவிகிதம்} = \frac{\text{எத்தனம் அசைந்த தூரம்}}{\text{சுமை அசைந்த தூரம்}}$$

$$= \frac{\text{எத்தனப் புயம்}}{\text{சுமைப்புயம்}}$$

## மதிப்பீட்டு வினாக்கள்

**1) மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பொறிகள் மூலம் நடைபெறாதது.
   (i) சுமையை விட எத்தனம் குறைவடைதல்
   (ii) எத்தனம் பிரயோகிக்கப்பட வேண்டிய திசையை வசதியான திசைக்கு மாற்றிக் கொள்ளல்
   (iii) பொறியின் மீது விசையைப் பிரயோகித்து வேலையைச் செய்து கொள்ளல்
   (iv) பொறியின் மீது செய்யப்படும் வேலையை விட அதிகமான வேலையை பொறியினால் செய்து கொள்ளல்.

2. எளிய பொறி அல்லாதது.
   (i) பாக்குவெட்டி (ii) கப்பி (iii) ஆப்பு (iv) மோட்டார் வாகன இயந்திரம்

3. ஒரு நெம்புகோலின் மீது 12N எத்தனத்தைப் பிரயோகித்து 48N சுமையை உயர்த்தலாம். இப்பொறியின் பொறிமுறை நயம் யாது.
   (i) 1 (ii) 2 (iii) 3 (iv) 4

4. சாய்தளம் எனும் பொறியில் அடங்குவது
   (i) திருகாணிச்செலுத்தி, ஆப்பு, படிக்கட்டு
   (ii) திருகாணிச் செலுத்தி, படிக்கட்டு, அலவாங்கு
   (iii) திருகாணி, ஆப்பு, ஏணி
   (iv) படிக்கட்டு, திருகாணி, குறடு

5. சுமையை விட அதிக எத்தனத்தைப் பிரயோகித்தல் எப்போதும் தேவைப்படும் சந்தர்ப்பம் தொடர்பான கலந்துரையாடலில் இரு மாணவர்கள் பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்தினர்.
   A - திருகு யாக்கைப் பயன்படுத்தும்போது சுமையைவிட அதிக எத்தனம் பிரயோகிக்க வேண்டும்.
   B - தனிக்கப்பியைப் பயன்படுத்தும்போது எத்தனம் சுமையை விட அதிகமாகும்.
   C - மூன்றாம் வகை நெம்புகளில் எப்போதும் பிரயோகிக்கப்படும் எத்தனம் சுமையை விட அதிகம்
   **இவற்றுள் மிகச் சரியானது**

| | கூற்று A | கூற்று B | கூற்று C |
|---|---|---|---|
| I | சரி | பிழை | சரி |
| II | பிழை | பிழை | பிழை |
| III | பிழை | சரி | சரி |
| IV | சரி | சரி | சரி |

2. அமைப்பு A, B தொடர்பாக கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) அமைப்பு Aயில் வழங்க வேண்டிய விசை T எவ்வளவு? ……………………………

(ii) அமைப்பு Bயில் வழங்க வேண்டிய விசை T எவ்வளவு? ……………………………

(iii) A, Bயில் பொறிமுறை நயம் கூடிய தொகுதி எது? ……………………………

(iv) விசையை வழங்குவதற்கு மட்டும் வசதியாக்கப் பட்டுள்ள தொகுதி எது? ……………………

(v) கப்பித் தொகுதி B மூலம் பெறப்படும் நன்மைகள் 2 தருக.
…………………………… ……………………………

3. சாய்வான பலகை ஒன்றில் எண்ணெய் பரல் ஒன்றை ஏற்றுவதைப் படம் காட்டுகிறது




(i) இங்கு வேலையை இலகுவாக்க எவ்வகைப் பொறி பயன்படுகிறது? ……………………………
(ii) இங்கு எத்தனம் அசைந்த தூரம் எவ்வளவு ……………………………………………
(iii) இங்கு சுமை அசைந்த தூரம் எவ்வளவு? ……………………………………………

(iv) இப்பொறியின் வேக விகிதம் எவ்வளவு? ……………………………………….………
(v) இப்பொறி உராய்வற்றது எனக் கொள்ளின் பொறிமுறைநயம் எவ்வளவு? ………………

4. நெம்புகோல் மூலம் கல் புரட்டப்படுவதைப் படம் காட்டுகிறது.




(i) இங்கு பொறிமுறை நயம் எவ்வளவு?
பொறிமுறை நயம் = …………….……………
= ……………………………
(ii) வேக விகிதம் எவ்வளவு?
வேக விகிதம் = …………………………..
= …………………………..
(iii) பொறி செய்த வேலை எவ்வளவு? ……………….…………
(iv) பொறி மீது செய்யபட்ட வேலை? …………………………..
(v) பொறியின் திறன் எவ்வளவு?
திறன் = ……………………….………
= ……………………………….

5. பின்வரும் கருவிகளின் நெம்புகோல் வகையைக் குறிப்பிடுக.
(i) பாக்குவெட்டி - ……………….….…
(ii) குறடு - …………………….…
(iii) சாவணம் - …………………….
(iv) ஒற்றைச் சில்லுவண்டி - …………………….
(v) கத்தரிக்கோல் - …………………….

6. பின்வரும் கூற்றுக்களைச் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.
(i) பொறி செய்த வேலை= சுமை x சுமை அசைந்த தூரத்தால் குறிக்கப்படும். ( )
(ii) வேலை வெளியீடு (Work output) ஆனது பொறி செய்த வேலை ஆகும். ( )
(iii) துவிச்சக்கர வண்டி ஒரு சிக்கலான பொறி ஆகும். ( )
(iv) எந்தவொரு எளிய பொறியிலும் பொறிமுறைநயம் அதிகரிக்க வேக விகிதமும் அதிகரிக்கும். ( )
(v) சாய்தளத்தின் சாய்வில் வழங்க வேண்டிய எத்தனம் தங்குவதில்லை. ( )
(vi) மூன்றாம் வகை நெம்புகளில் பொறிமுறைநயம் ஒன்றிலும் அதிகமாகும். ( )
(vii) இரண்டாம் வகை நெம்பில் நடுவில் பொறுதி அமைந்திருக்கும். ( )
(viii) பொறுதி காணப்படும் இடத்திற்கேற்ப நெம்புகோல் நான்கு வகைப்படும். ( )
(ix) உராய்வற்ற தனிக்கப்பியில் சுமையும், எத்தனமும் சமனாகும். ( )
(x) தும்புத்தடியால் வீடு கூட்டுவது 1ம் வகை நெம்பாகும். ( )

7. 900N சுமையை 2.4m உயரத்திற்கு எடுத்துச் செல்ல சாய்வாக வைக்கப்பட்ட பலகை எவ்வாறு பயன்படுகிறது என்பது வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இங்கு பிரயோகிக்க வேண்டிய எத்தனம் 300N ஆகும். இங்கு சாய்தளத்தின் திறன் 60% ஆகும்.




(i) சாய்தளத்தின் பொறிமுறை நயம் யாது?
…………………………….…………………
…………………………….…………………
(ii) பயன்படுத்தப்பட்ட பலகையின் நீளத்தைக் காண்க?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
(iii) இதன் வேக விகிதம் யாது?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
(iv) பொறி மீது செய்யப்பட்ட வேலை எவ்வளவு?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
(v) இங்கு பொறி செய்த வேலை எவ்வளவு?
……………………………………………………………………………………………

**வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்.**

**தரம் 09** **விஞ்ஞானம்** **தவணை III**

**அலகுப்பரீட்சை - 15** **எளிய பொறிகள** **செயலட்டை 7**

# பகுதி I

**1) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1  படத்தில் காட்டப்பட்டது எவ்வகை எளிய பொறியாகும்.
(i) நெம்பு (ii) கப்பி (iii) சாய்தளம் (iv) சில்லோடு அச்சாணி

2. பின்வருவனவற்றுள் எளிய பொறி அல்லாதது
(i) கத்தரிக்கோல் (ii) தையல் இயந்திரம் (iii) ஆப்பு (iv) கப்பி

3. கைத்தேங்காய் துருவி ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது எவ்வகை எளிய பொறி ஆகும்.
 நெம்பு (ii) சாய்தளம் (iii) கப்பி (iv) சில்லோடு அச்சாணி

4. இங்கு காட்டப்பட்டது உராய்வற்ற கப்பி வகைப்பொறியாகும்.
A - இதில் பயன்படும் விசை வாளியின் நிறைக்குச் சமனாகும்
B - கப்பியில் விசை பிரயோகிக்க வேண்டிய திசையை எமக்கு ஏற்ற விதத்தில் மாற்றலாம்.
இக்கூற்றுக்கள் தொடர்பாக சரியானது.
(i) A (ii) B (iii) A, B (iv) கூறமுடியாது




5. இங்கு காட்டப்பட்டது எத்தனையாம் வகை நெம்பு
(i) 1ம் வகை (ii) 2ம் வகை (iii) 3ம் வகை (iv) கூறமுடியாது



6. பொறி ஒன்றின் சுமை, எத்தனம் என்பவற்றிற்கிடையிலான விகிதமாக அமைவது
(i) பொறிமுறை நயம் (ii) வேகவிகிதம் (iii) திறன் (iv) பொறி செய்த வேலை

7. பின்வருவனவற்றுள் அலகு அற்ற கணியங்களைக் கொண்ட தொகுதி எது
(i) சுமை, பொறிமுறை நயம் (ii) எத்தனம், வேகவிகிதம்
(iii) சுமை, எத்தனம் (iv) பொறிமுறை நயம், வேகவிகிதம்

8. கூட்டம் Aயை கூட்டம் Bயுடன் இணைக்கும்போது சரியான ஒழுங்கைத் தருவது

| | A | B |
|---|---|---|
| 1. | சுமை / எத்தனம் | P. திறன் |
| 2. | எத்தனம் அசைந்த தூரம் / சுமை அசைந்த தூரம் | Q. பொறிமுறை நயம் |
| 3. | பொறிமுறை நயம் / வேக விகிதம் x 100 | R. வேக விகிதம் |

(i) PQR (ii) QRP (iii) RPQ (iv) QPR

9. சாய்தள வகைப் பொறியில் அடங்குவது பின்வருவனவற்றுள் எது.
(i) திருகாணிச் செலுத்தி (ii) ஆப்பு (iii) குறடு (iv) பாக்குவெட்டி

10. இப்பொறியின் பொறிமுறை நயம்
(i) 200N / 600N (ii) 600N / 200N
(iii) 600N x 200N / 200N (iv) 600N x 100



11. இப்பொறியின் பொறிமுறை நயம், வேகவிகிதமாக அமையக் கூடிய விடை எது?




1. 1, 1
2. 1, 2
3. 2, 1
4. 2, 4

12. நெம்புகோல் ஒன்று தரப்பட்டுள்ளது. இதில் A, B, C எனும் புள்ளிகள் முறையே குறிப்பது.

(i) சுமை, பொறுதி, எத்தனம்
(ii) பொறுதி, சுமை, எத்தனம்
(iii) எத்தனம், பொறுதி, சுமை
(iv) எத்தனம், சுமை, பொறுதி




13. தரப்பட்ட எந்த அமைப்பில் சுமையைக் குறைந்த விசையுடன் அசைக்க முடியும்.

(i) (ii) (iii) (iv)



14. பின்வரும் கப்பித் தொகுதிகளில் பொறிமுறை நயம் கூடியது எது.

(i) (ii) (iii) (iv)




15. பொறி ஒன்றின் நயம் 4 வேகவிகிதம் 5 எனின் அதன் திறன் யாது.

(i) 80% (ii) 125% (iii) 20% (iv) 100%

(15 x 2 = 30 புள்ளிகள்)

**(2) தொடர்புபடுத்துக (உதாரணம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.**

| | A |
|---|---|
| 1. | 1ம் வகை நெம்பு |
| 2. | 2ம் வகை நெம்பு |
| 3. | 3ம் வகை நெம்பு |
| 4. | சாய்தளம் |
| 5. | கப்பி |
| 6. | சில்லோடு அச்சாணி |

| B |
|---|
| • ஒற்றைச் சில்லு வண்டி |
| • பாரஞ் சாம்பி |
| • சாவணம் |
| • பாக்குவெட்டி |
| • திருகாணிச் செலுத்தி |
| • குறடு |
| • திருகாணி |
| • படிக்கட்டு |
| • தும்புத்தடியால் கூட்டுதல் |
| • கையை நீட்டுதல் |

(10 x 2 = 20 புள்ளிகள்)

**(3)** 450N சுமையை 2m உயரத்திற்கு எடுத்துச் செல்வதைப் படம் காட்டுகிறது. இங்கு எத்தனம் 150N ஆகும்.




(i) இது என்ன வகை எளிய பொறியாகும்? …………….………….

(ii) இதன் பொறிமுறை நயம் என்ன? = ……………..……….…….

= ……………..…………..….

(iii) இங்கு எத்தனம் அசைந்த தூரம் எவ்வளவு? …………………….

(iv) சுமை அசைந்த தூரம் எவ்வளவு? ……………..…………………

